இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-08-2025

# இரண்டு நீதியரசர்களின் குரல்கள்!

**த**மிழ்நாடு அரசின் சார்பில் ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த தேசியக் கருத்தரங்கம் சென்னையில் கடந்த 23 ஆம் தேதியன்று நடைபெற்றது. கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றினார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதில் பங்கேற்ற இரண்டு நீதியரசர்களின் குரல்கள், மிகமிக முக்கியமானவை ஆகும்.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர்களான குரியன் ஜோசப், செல்லமேஸ்வரர் ஆகிய இருவரும் ஒன்றிய அரசு புரிந்து தெளிய வேண்டிய பல கருத்துகளை அந்த கருத்தரங்கில் வெளிப்படுத்தினார்கள்.

* "இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் தான். இதனை இந்திய அரமைப்புச் சட்டம் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. நமது அரசியல் சட்டம், கூட்டாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது. ஜனநாயக நாட்டில் மக்களும், ஒன்றிய அரசும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும்" என்று தெளிவுபடுத்தி இருக்கிறார் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப்.

* "மத்திய அரசு என்ற வார்த்தை அரசமைப்புச் சட்டத்தில் இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டம் கூட்டாட்சியை அடிப்படையாகக் கொண்டது. ஒன்றிய அரசின் அதிகாரங்கள், அனைத்து மாநிலங்களுக்குமானவை என பரவல் ஆக்கப்பட வேண்டும்" என்று உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் செல்லமேஸ்வரர் முழங்கி இருக்கிறார்.

**'ஒன்றியம்' என்ற சொல்லை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன போது, அது ஏதோ கேவலமான சொல்லைப் போல பலரும் விமர்சித்தார்கள். 'ஒன்றியம்' என்று சொல்லக் கூடாது என்றார்கள். ஆனால் இப்போது நீதியரசர்களே அதனைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.**

**அரசமைப்புச் சட்டத்தை எழுதிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்ன சொல்லைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.**

"கூட்டாட்சி என்ற சொல்லுக்குப் பதிலாக ஒன்றியம் (Union) என்ற சொல்லே குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளதை யாவரும் காணலாம். பெயரில் மிக்க பொருள் இல்லை; ஆயினும், குழு பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் (கி.பி. 1867 ஆம் ஆண்டின்) முன்னுரையிலுள்ள சொல்லை நடைமுறையில் ஏற்க முனைந்துள்ளது; அதுவே இந்தியாவை 'ஒன்றியம்' என்று குறிப்பிடுவதனால் உண்டாகும் நலன்களை அறிந்துள்ளது; இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, அமைப்பிலே கூட்டாட்சியாக இருந்தாலும், இந்தியா ஒன்றியம் என்றே குறிப்பிடப்படுகிறது..

**(நமது அரசியலமைப்பு)காலச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக ஓரரசு முறையாகவும்** (Unitary State), **கூட்டாட்சி முறையாகவும்** (Federal State) **இயங்கக் கூடியதும் ஆகும்" என்று சொன்னார் அம்பேத்கர் அவர்கள்.**

**ஒன்றிய, மாநில உறவுகளை ஆராய அமைக்கப்பட்ட குழுவின் தலைவரான நீதிபதி சர்க்காரியா அவர்கள் சொன்னார்:**

**"இந்தியாவில் பொதுவாகப் பெருமளவில் அதிகாரக் குவிப்பு நடைபெற்று வருகிறது. இதைத் தடுப்பதற்குப் பயனுள்ள வகையிலும் மனசாட்சியுடனும் எல்லா நேரங்களிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அளவுக்கு மீறிய அதிகாரக்குவியல்களால்** (Undue Powers) **மத்திய அரசுக்கு இரத்தக் கொதிப்பும், மாநில அரசுகளுக்கு இரத்த சோகையும் ஏற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். இதன் விளைவு என்னவெனில், திறமையின்மையும் நோயும் தான் இதன் வெளிப்பாடுகளாக உள்ளன. உண்மையில் அதிகாரக் குவியல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாகத் தீமைகளைப் பெருக்கியுள்ளது" என்றார். இதனைத் தான் இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள்.**

"இந்திய திருநாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் மிகப் பெரும் பொறுப்பை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி,நகர்ப்புற மேம்பாடு என அனைத்தையும் மாநிலங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் நிறைவேற்றிடத் தேவையான அதிகாரங்கள் மாநிலங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு ஒன்றிய அரசிடம் குவிக்கப்பட்டு வருகின்றன. பசியால் வாடித் தவிக்கும் தன்னுடைய குழந்தைக்கு என்ன உணவு கொடுத்திட வேண்டும் என்பது அந்த குழந்தையின் தாய்க்குத் தான் தெரியும். ஆனால், அந்த குழந்தை உண்ணும் உணவை, கற்கும் கல்வியை, கடந்து செல்லும் பாதையினை, டெல்லியில் இருந்து யாரோ ஒருவர் தீர்மானித்தால் கருணையே உருவான தாய்மையும் பொங்கி எழத்தானே செய்யும்?" என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கேட்ட முதலமைச்சர் அவர்கள் இது குறித்து ஆராய குழு அமைத்துள்ளார்கள்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.குரியன் ஜோசப் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவை முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ளார்கள். இதன் உறுப்பினர்களாக, இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தரும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் மேனாள் துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.**

இக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனவரி மாத இறுதிக்குள்ளும், இறுதி அறிக்கையை இரண்டு ஆண்டுகளிலும் அரசுக்கு வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஒன்றிய மாநில அரசுகளின் அதிகாரங்கள், உறவுகள் குறித்து ஆராய ஒன்றிய அரசு இதுவரை மூன்று ஆணையங்களை அமைத்துள்ளது. பிரதமர் இந்திரா காந்தி, நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை 1983 ஆம் ஆண்டு அமைத்தார். பிரதமர் மன்மோகன் சிங், நீதிபதி பூஞ்சி தலைமையில் 2007 ஆம் ஆண்டு ஒரு குழுவை அமைத்தார். 2000 ஆம் ஆண்டில் நீதிபதி வெங்கடாச்சலய்யா தலைமையில் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டை ஆராய ஒரு குழுவை அமைத்தார் பிரதமர் வாஜ்பாய்.

**மாநில அரசின் சார்பில் இதற்கான குழுவை முதன்முதலில் நீதியரசர் இராஜமன்னார் தலைமையில் 1971 ஆம் ஆண்டு அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக குரியன் குழுவை அமைத்துள்ளார் இன்றைய முதலமைச்சர்.**

**கூட்டாட்சியை வலியுறுத்துவதும், மாநில சுயாட்சி கேட்பதும் அரசியல் கோரிக்கை அல்ல. ஒரு அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல. இந்தியாவுக்கான கோரிக்கை. இந்திய ஒருமைப்பாட்டை காக்கும் கோரிக்கை தான் என்பதை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் இருவருமே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.**




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில், கூடலூர் மற்றும் இராசிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### காலை உணவுத் திட்ட விரிவாக்க தொடக்க விழாவில் பங்கேற்ற

# பஞ்சாப் முதல்வர் பகவந்த் மானுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 28 - முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்ட விரிவாக்க தொடக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாநில எல்லைகளையும் தாண்டி பலரையும் ஈர்ப்பது தொடர்கிறது.

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள், நேற்று, காலை உணவுத் திட்ட விரிவாக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்காக அவருக்கு என் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இங்கு இத்திட்டத்தின் தாக்கத்தைக் கண்டபின்னர், தனது பஞ்சாப் மாநிலத்திலும் இதேபோன்ற திட்டத்தைத் தொடங்குவது குறித்து பரிசீலிப்பதாகவும், அது குறித்து கலந்தாலோசனை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கும் நமது நன்றிகள்!

அவரது சொற்கள் மகிழ்ச்சியாலும் பெருமித உணர்வாலும் என் நெஞ்சத்தை நிறைக்கின்றன. பஞ்சாபிலும் இத்திட்டம் செயல் வடிவம் பெறும் நன்னாளினை ஆவலுடன் நோக்கியுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சுதர்சன் ரெட்டியின் தீர்ப்பு குறித்து அமித்ஷா விமர்சனம்!

# நீதித்துறையின் சுதந்திரத்தில் உறைய வைக்கும் விளைவை ஏற்படுத்தும்!

## ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் 18 பேர் கடும் கண்டனம்!

*புதுடெல்லி, ஆக. 28 -* சல்வா ஜூடும் தீர்ப்பு தொடர்பாக எதிர்க்கட்சிகளின் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் சுதர்சன் ரெட்டி மீதான உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கருத்து துரதிர்ஷ்டவசமானது என்றும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பாரபட்சமான தவறான விளக்கம் என்றும் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

**அமித்ஷா குற்றச்சாட்டு!**

2011ஆம் ஆண்டு சல்வா ஜூடும் தீர்ப்பின் மூலம் சுதர்சன் ரெட்டி "நக்சலிசத்தை ஆதரித்தார்" என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா குற்றம் சாட்டினார்.

அப்போது, உச்சநீதி மன்றம், விழிப்புணர்வு இயக்கத்திற்கு எதிராக தீர்ப்பளிக்காவிட்டால் 2020 ஆம் ஆண்டளவில் நக்சல் தீவிரவாதம் முடிவுக்கு வந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும், நக்சல் எதிர்ப்பு முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் ஒரு சித்தாந்தத்தால் சுதர்சன் ரெட்டி ஈர்க்கப்பட்டதாகவும் அமித்ஷா குற்றம் சாட்டினார்.

அமித்ஷாவின் இந்த கருத்துக்களுக்கு எதிராக ஓய்வுபெற்ற நீதிபதிகள் 18 பேர் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில்,

'சல்வா ஜூடும் தீர்ப்பு எந்த வகையிலும் நக்சலிசத்தை ஆதரிக்கவில்லை. அமித்ஷாவின் கருத்துக்கள் நீதித்துறை பகுத்தறிவை சிதைக்கிறது. ஒரு மூத்த அரசியல் தலைவர் உச்ச நீதிமன்ற தீர்ப்பை தவறாக சித்தரிப்பது நீதித்துறை சுதந்திரத்தில் உறைய வைக்கும் விளைவை ஏற்படுத்தும்.

**நாகரிகத்தை கடைப்பிடிக்கவேண்டும்!**

அரசியல் ரீதியாக பேசும்போது நிதானத்தையும், நாகரிகத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். சித்தாந்தப் போராட்டங்கள் பிரச்சாரங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம், ஆனால் அவை கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான பிரச்சாரம் சித்தாந்த ரீதியாக இருக்கலாம், ஆனால் அதை நாகரிகமாகவும் கண்ணியமாகவும் நடத்த வேண்டும். இரண்டு வேட்பாளர்களின் சித்தாந்தத்தையும் விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். அமித்ஷாவின் கருத்து துரதிர்ஷ்ட வசமானது. இது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மீதான பாரபட்சமான தவறான விளக்கம்' எனத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குரியன் ஜோசப், மதன் பி லோகூர், ஜே.செல மேஸ்வர், ஏ.கே.பட்நாயக், அபய் ஓகா, விக்ரம்ஜித் சென் மற்றும் கோபால கவுடா ஆகியோருடன் முன்னாள் தலைமை நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ். முரளிதர், கோவிந்த் மாத் தூர், சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் அஞ்சனா பிரகாஷ் ஆகியோரும் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

நக்சல்களை எதிர்க்க சத்தீஸ்கர் அரசாங்கம் பழங்குடி இளைஞர்களை கொண்டு சல்வா ஜூடும் எனும் போராளிக்குழுவை அமைக்க முடிவு செய்தது.

ஆனால், மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பழங்குடி இளைஞர்களை பயன்படுத்துவது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று 2011ல் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சுதர்சன் ரெட்டி மற்றும் எஸ்.எஸ். நிஜ்ஜார் ஆகியோரால் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் அந்த அமைப்பை கலைக்கவும் உத்தரவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்திரம், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவாரூர் குடவாசலில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அரசு கலைக்கல்லூரி கட்டடத்திற்கு கல்லூரி மாணவிகள் காணொளி வாயிலாக நன்றி தெரிவித்தனர். உடன் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன், வை.செல்வராஜ் எம்.பி., முன்னாள் எம்.பி. ராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.